<u>பி.வா.சா.1 ___ பொற்செல்வி ஆஜர், குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் தொடர்ந்து வாதி சிதம்பரம்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். குடியிருப்பதை பொறுத்து எனக்கு கிரயம் ஆகிவிட்டதாக கூறியிருக்கும் நிலையில் குடியிருக்க அவகாசம் ஏதாவது கொடுத்தேனா என்றால் 3 மாதம் இருப்பதற்கு அவகாசம் கொடுத்தேன். அதற்குபின்னிட்டு எப்போது நடவடிக்கை எடுத்தேன் என்றால் காலி செய்யச்சொல்லி கேட்டேன் அது எப்போது கேட்டேன் என்றால் 3 மாதங்கள் கழித்து சென்று கேட்டேன். எனக்கு தேதி ஞாபகமில்லை என்றால் சரிதான். நான் இதுவரை அவரை காலி செய்ய சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் 3 மாதங்கள் அவர் குடியிருப்பதற்கு அனுமதி கொடுத்ததற்கு ஆவணங்கள் ஏதாவது எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நான் எழுதி வாங்கியதாக சொல்லப்படும் கிரய ஆவணத்திலும் அவ்வாறு 3 மாதம் அனுமதி கோரி வாசகங்கள் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றதாக சொல்லப்படும் ஆவணத்தில் தார்சு வீடு எதுவும் காட்டவில்லை என்றால் சரிதான். கடனுக்காக எழுதி வாங்கிய ஆவணம் என்பதால் வாதிதான் தொடர்ந்து அந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றும் அதனால்தான் கிரய ஆவணத்தில்கூட வீட்டை காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியும் நானும் சேர்ந்து அவர் என்னிடம் பெற்ற கடனை வட்டியுடன் திரும்பி செலுத்திவிட்டால் மறுகிரயம் செய்துக்கொடுப்பதாக வாய்மொழியாக ஒப்பந்தம் போட்டுக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் நான் அவருக்கு மறுகிரயம் செய்துக்கொடுக்கவேண்டி பத்திரம் ஒன்று தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. நான் உண்மையில் கிரயம் பெற்றிருந்தால் கிரய ஆவணத்தில் வீட்டை காட்டியிருப்பேன் என்றும் உண்மையான கிரயம் ஆவணம் இல்லை என்பதால்தான் வீட்டை

காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. அந்த மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் வாதியின் பெயரில்தான் உள்ளது. தற்போது வரை மின் கட்டணம் அவர்தான் செலுத்திவருகிறார் என்றால் சரிதான். நர்ன என் பெயரில் மின் இணைப்பை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் நான் அந்த வீட்டை இடிப்பதாக இருப்பதால் மாற்றிக்கொள்ளவில்லை. தொடர்ந்து வீட்டு வரியை வாதிதான் செலுத்திவருகிறார் என்றால் நானும் செலுத்தியிருக்கிறேன். எப்போது நான் செலுத்தினேன் என்றால் 2019ம் ஆண்டு செலுத்தினேன். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீது பட்டா மாற்றம் கோரி தாக்கல் செய்த மனு, அதற்கான ஒப்புதல் அட்டை ஆகியவை வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் நான் வாதியை கேட்டு பார்த்துவிட்டு அவர் இன்று வரை செய்யாததால் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளேன். நான் வாதியிடம் கேட்டதாக சொல்வது பொய்யானது என்றும், வழக்கை சொத்தை அபரிக்க வேண்டி பொய்யாக தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி இதுநாள் வரையில் ரூ.1,61,500/-ஐ அசல் மற்றும் வட்டி செலுத்தியுள்ளார் என்று சொன்னால் இல்லை. நான் முழுதொகையை பெற்றுக்கொண்ட பின்னிட்டும் எங்களுக்குள் ஏற்பட்ட வாய்மொழி ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் மறுகிரயம் செய்துக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 18.11.2016ம் தேதியில் முழுதொகையும் பெற்றுக்கொண்ட பின்னிட்டும் வாய்மொழி ஒப்பந்தபடி கிரயம் செய்துகொடுக்க மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு நான் சொத்து என்னுடைய பெயரில் இருப்பதால் வில்லங்கம் ஏற்படுத்த முயற்சித்தேன் என்று சொன்னால் சரியல்ல. 28.11.2016ம் தேதியில் வாதி எனக்கு ஒரு சட்டஅறிவிப்பு ஒன்று அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் என்ன செய்தேன் என்றால் நான்

எதுவும் செய்யவில்லை.அறிவிப்பில் கண்டுள்ளபடி நான் கிரயம் செய்துக்கொடுக்காததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதி அறிவிப்பில் கூறியுள்ள சங்கதிகள் உண்மை என்று தெரிந்ததால்தான் நான் பதில் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரயப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தை காண்பித்ததுபோலதான் வழக்கின் சொத்துவிவரம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தமிழ்நாடு அரசு வழிக்காட்டின் மதிப்பீட்டின்படிதான் இவ்வழக்கில் சொத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் கிரய ஆவணத்தில் கிரய தொகையாக ரூ.30,000ம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி உண்மையான சங்கதிகளை கொண்டும் சரியான சொத்துவிவரத்தையும். மதிப்பீடையும்காட்டிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ளவாறு மறு கிரயம் செய்துக்கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. வாதிதான் செலுத்திய அசல் மற்றும் வடடிக்காக நான் டைரியில் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றும் அதைமறுத்து வீண் எதிர்வழக்காடி சொத்தை அபகரிக்க வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஓம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.